# நாட்டைச் சீரழித்த ராஜபக்சக்கள் மீண்டும் நாடாளுமன்றம் வர இடமளிக்க வேண்டாம்

## மக்களிடம் சந்திரிகா வலியுறுத்து



**நாட்டைச் சீரழித்த ராஜபக்சக்கள் கும்பல் மீண்டும் நாடாளுமன்றம் வருவதற்கு மக்கள் எவரும் இடமளிக்கக்கூடாது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்,**

**“இலங்கையில் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தி நாட்டைச் சீரழித்தவர்கள் ராஜபக்சக்களே. இதனை உயர்நீதிமன்றமும் அண்மையில் வழங்கிய தீர்ப்பில் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, இப்படிப்பட்ட ராஜபக்ச குடும்பத்தினரும், அவர்களின் சகாக்களும் மீண்டும் நாடாளுமன்றம் வர நாட்டு மக்கள் இடமளிக்கக்கூடாது.**

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் ராஜபக்ச கும்பலுக்கு நாட்டு மக்கள் உரிய பாடம் புகட்ட வேண்டும். அவர்களைக் கூண்டோடு தோற்கடிக்க வேண்டும். அவர்களின் அரசியல் அத்தியாயம் இத்துடன் முடிவுக்கு வர வேண்டும்.” - என்றார். (அ)**


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 18 திங்கட்கிழமை 04.12.2023 கதிர் 126



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## பல்கலைக்கழக நினைவுத் தூபி விவகாரம் இன்று மீண்டும் விசாரணைக்கு அழைப்பு!

யாழ். பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை தொடர்பில் மீண்டும் விசாரணைகள் இடம்பெறவுள்ளதாக தெரியவந்தது. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் இன்று நண்பகல் இந்த விசாரணைகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள தூபி தொடர்பிலேயே இந்த விசாரணகள் இடம்பெறவுள்ளன. பல்கலைக்கழகத்தினுள் அனுமதி பெறப்படாமல் தூபி அமைக்கப்பட்டுள்ளமை

2➤

## யாழில் கடமை விலகல் போராட்டம்



யாழ்ப்பாணத்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து டெங்கு ஒழிப்புக் கடமைகளில் இருந்து டெங்கு தடுப்பு உதவியாளர்கள் விலகியுள்ளனர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் அவர்கள் இன்று கையளித்துள்ளனர்.

நிரந்தர நியமனம் மற்றும் நிலுவை கொடுப்பனவு வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் சிக்கல்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமெனக் கோரியே கடமை விலகல் நடவடிக்கையை அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

தற்போதைய காலப்பகுதியில் டெங்கு தொற்று எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கு - கிழக்கில் பொலிஸ் அராஜகத்துக்கு உடனே முடிவு கட்டுங்கள்!

### ரணிலிடம் சஜித் இடித்துரைப்பு



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் அராஜகங்களுக்கு முறுப்புள்ளி வைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் .

அவர் மேலும் கூறுகையில்,

“பொலிஸார் தாம் நினைத்த மாதிரி செயற்படலாம் என்ற மனோநிலையில் இருக்கின்றார்கள். சந்தேகநபர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை மேற்கொள்கின்றார்கள்.

2➤

## பதற்ற நிலையை அடுத்து களனிப் பல்கலைக்கு பூட்டு

களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரிவுகளும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, மருத்துவ பீட விடுதிகள் தவிர்ந்த பல்கலைக்கழகத்தின் அனைத்து விடுதிகளும் மூடப்பட்டிருக்கும் அதேவேளை, அனைத்து மாணவர்களும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு முன்னர் அந்தந்த விடுதிகளை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்றிரவு உறங்கிக் கொண்டிருந்த போது கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் காரணமாக பல்கலைக்கழக நிர்வாகம் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளது.

மேலும் மாணவர்கள் மற்றும் கல்விசாரா

2➤

## பொலிஸ் உயர் அதிகாரிகள் பலருக்கு விரைவில் மாற்றம்

எதிர்வரும் நாட்களில் பொலிஸ் திணைக்களத்தின் பல உயர் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்பட்டதையடுத்து இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என அறிய வருகின்றது. இந்த இடமாற்றங்களில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் உள்ளடங்குவதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், பல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ரெந02)

## பிரதான சாட்சி சமூகமளிக்காதால் அடையாள அணிவகுப்பு 8ஆம் திகதி

வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞர் பொலிஸாரின் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்தமை தொடர்பான வழக்கில் இன்று 30 இற்கும் மேற்பட்ட பொலிஸார் அடையாள அணிவகுப்புக்காக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்துக்குச் சமூகமளித்திருந்தனர்.

எனினும், பிரதான சாட்சியான அலெக்ஸ்/டன் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்ட இளைஞர் நீதிமன்றத்துக்குச் சமூகமளிக்காத காரணத்தால் அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 8ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

அத்தோடு தொடர் மரண விசாரணை நாளை நீதிமன்றில் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அலெக்ஸ் படுகொலை வழக்கில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 4 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# காட்டு யானைகளின் தொல்லையால் இறக்காமம் கரும்பு செய்கை பாதிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் கரும்பு செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் காட்டு யானைகளின் தொல்லையால் பாரிய நஸ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட இறக்காமம், குடுவில், மாணிக்கமடு மற்றும் தண்ணி மலை ஆகிய கிராமங்களுக்குள் இரவு வேளைகளில் உட்புகும் காட்டு யானைகள் குடியிருப்புகளுக்கும் உடமைகளுக்கும் கரும்பு பயிர்களுக்கும் பலத்த சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. காட்டு யானைகள் கூட்டமாக வந்து கல்மடுப் பகுதி யிலுள்ள கரும்புத் தோட்டத்திற்குள்ளும் நுழைந்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்போது அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் பெரும் போக வேளாண்மைச் செய்கை நிறைவடைந்த நிலையில் விவசாயிகள் காட்டு யானைகளின் நடமாட்டத்தை இரவு பகலாக மிகுந்த கவனத்துடன் அவதானித்தும் வருகின்றனர்.

## மின்னல் தாக்கி விவசாயி மரணம்!

கலேவெல பிரதேசத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது மின்னல் தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதாக கலேவெல பொலிஸார் தெரித்தனர். தம்புள்ளை புலகல பிரதேசத்தைச் சேர்ந்த எம்.ஏ. சோமதிலாவில் 60 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் தனது குடும்பத்துடன் வயலில் விதை விதைத்துக் கொண்டிருந்த போது மின்னல் தாக்கி தூக்கி வீசப்பட்டதாக உறவினர்கள் கூறினர்.

இதையடுத்து அவர் உடனடியாகக் கலேவெல வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போது இடைவெளியில் உயிரிழந்திருந்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ)

## பதற்ற நிலையை அடுத்து .......

(முதலாம் பக்த் தொடர்ச்சி)

ஊழியர்கள் இடையே நிலவிய அமைதியற்ற சூழ் நிலையால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும், சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் களனி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தெரிவித்துள்ளார். (அ)

## பொலிஸ் அராஜகத்துக்கு .....

(முதலாம் பக்த் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கில் பொலிஸாரின் இந்த அத்துமீறல் செயல்கள் தலைவிரித்தாடுகின்றன. இதனால் அங்கு அப்பாவி மக்களின் உயிர்களும் பறிக்கப்படுகின்றன.

பொலிஸ்மா அதிபர் விவகாரத்தைக் கையிலெடுத்து அரசியல் செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலிஸாரின் இந்த அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்." - என்றார். (அ)

## பல்கலைக்கழக நினைவுத் தூபி ......

(முதலாம் பக்த் தொடர்ச்சி)

தொடர்பிலும், தூபி அமைப்புக்கான நிதி கையாளுகை தொடர்பிலும் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் உட்பட மூன்று பேரால் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இம் முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

இந்நிலையில், பல்கலைக்கழகத்தினுள் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைக்கப்பட்டதற்கான அவசியத் தன்மை குறித்தும், தூபி அமைப்பதற்காக அரச நிதி பயன்படுத்தப்பட்டதா என்பது தொடர்பிலும் விளக்கமளிக்குமாறு பல்கலைக்கழகப் பதிவாளரிடம் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு கடந்த மாதம் 7 ஆம் திகதி விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. இந்த விசாரணைகளின் போது, அன்றைய நிலைமையில் தூபி அமைக்கப்பட்டமை தொடர்பிலும், அதற்காகப் பெறப்பட்ட அனுமதிகள் தொடர்பிலும் பல்கலைக்கழக நிர்வாகம் தேவையான ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பித்திருந்ததுடன், தூபி அமைப்பதற்காக அரச நிதி பயன்படுத்தப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்தியிருந்தது.

இதனையடுத்து, தூபி அமைப்பதற்கான பல்கலைக்கழக மாணவர்களால் சேகரிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களுடன், அதனை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளையும், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளையும் இன்று நண்பகல் விசாரணைகளுக்குச் சமூகமளிக்குமாறு ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது.

இந் நிலையில், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் சிரேஷ்ட பொருளாளரும், பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர் ஒருவரும், தூபி அமைக்கப்பட்ட வேளையில் இருந்த மாணவர் ஒன்றியத் தலைவரும் இன்று நண்பகல் 1.00 மணியளவில் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் இடம்பெறவுள்ள விசாரணைகளுக்காகச் சென்றுள்ளனர்.

இதே நேரம், தூபி அமைப்புத் தொடர்பில் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் உட்பட மூன்று பேரால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட தகவல்களுக்குப் பல்கலைக்கழகத் தகவல் அறியும் அதிகாரியும், மேன்முறையீட்டு அலுவலரும் வழங்கிய பதில் திருப்திகரமானதல்ல என்று தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடு மீதான விசாரணைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி தகவல் அறியும் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விசாரணைகளுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகவல் அலுவலரும், முறைப்பாட்டாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

எனினும், தான் முறைப்பாட்டைக் கைவாங்கிக் கொண்டுள்ளதனால், விசாரணைக்குச் சமூகமளிக்கப்பேவதில்லை என்று முறைப்பாட்டாளர்களில் ஒருவரான பேராசிரியர் தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார். தனது முறைப்பட்டை அடிப்படையாக வைத்து தன்னைத் தமிழ் சமூகத்துக்கு எதிராகச் செயற்படும் ஒருவராகச் சித்தரிக்கும் வகையில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருப்பதனால் தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார். (01)








## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

**செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட**




**காலைக்கதிர் TV YouTube தளம்**

# சர்வதேச மனித உரிமைகள் தின வாரம் வெருகலில் அனுஷ்டிக்கப்பட்டது




(ஹஸ்பர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அகம் மனிதாபிமான வளநிலையத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை, வெருகல் பிரதேச சிவில் அமைப்புகளினால் இன்று திங்கட்கிழமை வட்டவன் பகுதியில் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது வெருகல் பகுதியில் மீறப்பட்டு வருகின்ற மனித உரிமைகள் தொடர்பாக மக்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக தமது பிரதேசத்தின் மணல் வளம் சுரண்டப்படுகின்றமை, காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளமை, பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழியில் முறைப்பாடுகளை பெறுவதற்கு மறுப்பு தெரிவிக்கப்படுகின்றமை உட்பட பல மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களை தெரிவித்ததோடு அது தொடர்பான மகஜர் ஒன்றினை மனித உரிமைகள் தினத்தன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நிறுவன சிவில் செயற்பாட்டாளர்களினால் டிசம்பர் 4 ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாணத்தில் 712 மாணவர்களுக்கு 9 ஏ மட்டக்களப்பு வலயம் பெறுபேற்றில் முன்னணி

(வி.ரி. சகாதேவராஜா)

அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதர (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளில் அதிகூடிய சித்தி வீதத்தைப் பெற்று கிழக்கு மாகீணத்தில் மட்டக்களப்பு வலயம் முன்னிலை பெற்றுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 26,874 மாணவர்கள் குறித்த பரீட்சைக்கு தோற்றினர். அவர்களில் 712 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி அடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 136 மாணவர்களும், கல்முனை கல்வி வலயத்தில் 122 மாணவர்களும், மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தில் 112 மாணவர்களும் என ஆகக் கூடிய எண்ணிக்கையில் 9ஏ சித்தி பெற்றுள்ளனர் .

மாணவர்கள் பெற்றுள்ள சித்திகளின் அடிப்படையில் மட்டக்களப்பு கல்வி வலயம் முதலிடத்தில் உள்ளது.

இரண்டாவது இடத்தில் கல்முனை வலயமும் மூன்றாவது இடத்தில் மகா ஓயா வலயமும் வந்துள்ளன.

G.C.E(O/L) 2022 Eastern Province

| Zone | Sat | 3C3S | % | 3C2S | % | Rank | 9A | 9W | Status |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Batticaloa | 2031 | 1617 | 80% | 1723 | 85% | 1 | 136 | 4 | Above the Province |
| Kalmunai | 2827 | 2066 | 73% | 2274 | 80% | 2 | 122 | 25 | Above the Province |
| Mahaoya | 739 | 527 | 71% | 589 | 80% | 3 | 11 | 1 | Above the Province |
| Akkaraipattu | 1918 | 1372 | 72% | 1503 | 78% | 4 | 43 | 14 | Above the Province |
| Batticaloa Central | 2422 | 1675 | 69% | 1854 | 77% | 5 | 112 | 38 | Above the Province |
| Thirukkovil | 950 | 636 | 67% | 726 | 76% | 6 | 21 | 5 | Above the Province |
| Ampara | 2842 | 1950 | 69% | 2153 | 76% | 7 | 79 | 32 | Above the Province |
| Mutur | 1220 | 795 | 65% | 900 | 75% | 8 | 30 | 28 | Above the Province |
| Batticaloa West | 920 | 613 | 66% | 690 | 74% | 9 | 3 | 8 | Above the Province |
| Paddiruppu | 1527 | 963 | 63% | 1103 | 72% | 10 | 24 | 11 | Below the Province |
| Sammanthurai | 1480 | 953 | 64% | 1040 | 70% | 11 | 33 | 31 | Below the Province |
| Dehiattakandiya | 999 | 580 | 58% | 687 | 69% | 12 | 10 | 7 | Below the Province |
| Trincomalee | 2275 | 1364 | 60% | 1541 | 68% | 13 | 59 | 30 | Below the Province |
| Trincomalee North | 383 | 206 | 54% | 253 | 66% | 14 | 2 | 11 | Below the Province |
| Kalkudah | 1608 | 929 | 58% | 1052 | 65% | 15 | 11 | 14 | Below the Province |
| Kantalae | 1197 | 659 | 55% | 761 | 64% | 16 | 15 | 38 | Below the Province |
| Kinniya | 1527 | 815 | 53% | 963 | 63% | 17 | 21 | 54 | Below the Province |
| Province | 26874 | 17729 | 66% | 19819 | 74% | | 712 | 373 | Province |

அக்கரைப்பற்று, மட்டக்களப்பு மத்தி, திருக்கோவில், அம்பாறை, மூதூர், மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு ஆகிய கல்வி வலயங்கள் முறையே நான்கு முதல் பத்து வரையான இடங்களுக்குள் வந்துள்ளன.

11 வது இடத்தில் சம்மாந்துறை வலயம் வந்துள்ளது.

## UCMAS சர்வதேச மனக்கணிதப் போட்டி யாழ் மாணவர்கள் சிறப்புப் பெறுதிகள்

**UCMAS** சர்வதேச மனக்கணிதப் போட்டி மலேசியாவில் நேற்று நடைபெற்றது. இப்போட்டியில் 80ற்கு மேற்பட்ட நாடுகளை சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர்

இலங்கையை பிரதிநித்துவபடுத்தி 60மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர்.

இவர்களில் யாழ்ப்பாண கிளையான UCMAS Jaffna Town Center சேர்ந்த மாணவன் சி பிரிவில் சர்வதேச ரீதியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு திருநெல்வேலி சென்ரரை சேர்ந்த சுதர்சன் அருனன்,றஜிப் வைசாளி, ஏ பிரிவில் சர்வதேச ரீதியில் மூன்று மாணவர்கள் இரண்டாம் இடத்தையும், மற்றும் யாழ்ப்பாணம் மற்றும் திருநெல்வேலி 20 மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் சர்வதேச ரீதியில் பெற்றுள்ளனர். 24மாணவர்களும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கல்முனை கார்மேல் பற்றிமாவில் 18 மாணவர்க்கு 9 ஏ பெறுபேறு

(வி.ரி.சகாதேவராஜா)

கல்விப் பொதுச் சாதாரண தர பரீட்சையில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் 18 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ தரத்தில் சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர் என அதிபர் அருட்சகோதரர் ச.இ. றெஜினோல்ட் தெரிவித்தார்.

263 மாணவர்கள் தோற்றிய இப்பரீட்சையில் 254 மாணவர்கள் க. பொ. த உயர்தரம் பயில தகைமை பெற்று உள்ளனர். 8 ஏ சித்திகளை 32 மாணவர்களும், 7 ஏ சித்தி களை 24 மாணவர்களும் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கத்தியால் குத்தி கணவனை படுகொலை செய்த மனைவி

இரும்புக் கம்பியால் தாக்கிய கணவரிடம் இருந்து தப்பிக்க முற்பட்ட மனைவி, கணவரின் கண்களில் மிளகாய்பொடியைத்தூவி கழுத்தில் கத்தியால் குத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் வெல்லவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்தவர் தல்விட பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய எஸ். பிரதீப் குமார எனவும், சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர் 36 வயதுடைய ஆடை தொழிற்சாலை பெண் ஊழியர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணவர், மனைவி இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதால் உயிரிழந்த நபர் தனது மனைவியை இரும்புக் கம்பியால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார் எனவும், இதையடுத்து மனைவி மேற்கொண்ட பதில் தாக்குதலில் கணவன் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# வெளிநாடுகளில் வசிக்கும் ஹமாஸ் தலைவர்களை கொல்வதற்கு இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்



பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிரான போர் முடிந்த பிறகு, இஸ்ரேல் முன்னாள் பிரதமர் கோல்டா மீரின் வழியைப் பின்பற்ற இப்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விரும்புவதாகக் கூறப்படுகிறது. இதன்படி, இஸ்ரேல் எதிரிகள் (ஹமாஸ் தலைவர்கள்) எந்த நாட்டில், எந்த கண்டத்தில் இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து கொலை செய்ய 'ஒபரேஷன் ராத் ஆப் காட்' போன்ற திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கவும் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

குறிப்பாக துருக்கி, லெபனான் மற்றும் கத்தாரில் உள்ள ஹமாஸ் தலைவர்களை ஒழிப்பதற்கான திட்டத்தை இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் வகுத்து வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்த திட்டம் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று மொசாட் அமைப்பின் முன்னாள் இயக்குநர் இப்ரெய்ம் ஹலெவி கவலை தெரிவித்துள்ளார்.

மொசாட் உளவு அமைப்பு தயாரித்துள்ள பட்டியலில், இஸ்மாயில் ஹனியே, முகம்மது டெய்பி, யாயா சின்வார் மற்றும் காலித் மஷால் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதில் இஸ்மாயில் ஹனியே (60)பாலஸ்தீன முன்னாள் பிரதமர் (2006)ஆவார். இவர் ஹமாஸ் பொலிட் பீரோதலைவராக 2017-ல் தேர்வானார். இப்போது தாமாக முன்வந்து வெளிநாடுகளில் (கத்தார், துருக்கி) வசிக்கிறார்.

முகம்மது டெய்ப் என்பவர் ஹமாஸ் ராணுவ பிரிவு தலைவர். இவர்தான் இஸ்ரேலின் முதல் எதிரி. இவரை கொலை செய்ய இஸ்ரேல் 6 முறை முயற்சி செய்துள்ளது. இவர் அமெரிக்காவின் சர்வதேச தீவிரவாதிகள் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளார். இவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியவில்லை.

யாயா சின்வார் (61) இஸ்டைன் அல்-காசம் பிரிகேட்ஸ் (ஹமாஸ் ராணுவம்) முன்னாள் கமாண்டர் ஆவார். இவர் 2017-ல் காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பின் தலைவராக தேர்வானார். 23 ஆண்டுகள் இஸ்ரேல் சிறையில் இருந்த இவர், கைதிகள் பரிமாற்ற திட்டத்தின் கீழ் 2011-ல் வெளியில் வந்தார்.

காலித் மஷால் என்பவர் ஹமாஸ் அமைப்பின் பொலிட்பீரோ உறுப்பினர் ஆவார். இவர் இப்போது கத்தாரில் வசிப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த 1997 இல் ஜோர்டானில் இருந்த இவரை கொலை செய்ய மொசாட் முகவர்கள் கனடா சுற்றுலாப் பயணிகள் போர்வையில் முயற்சி செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு

இந்தோனேசியாவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து 11 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 12 பேர் மாயமாகியுள்ளனர்.

மேற்கு சுமத்ரா பகுதியில் உள்ள மராபி எரிமலையில் ஞாயிற்றுக்கிழமை எரிமலை சீற்றம் ஏற்பட்டுள்ளது.

படாங் தேடல் மற்றும் மீட்பு படையின் தலைவர் அப்துல் மாலிக் கூறுகையில், "26 பேர் அப்பகுதியில் இருந்து வெளியேற்றப்படாமல் இருந்துள்ளனர். அவர்களில் 14 பேரை கண்டுபிடித்துள்ளோம். அதில் 3 பேர் மட்டுமே உயிருடன் உள்ளனர். 11 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 12 பேர் மாயமாகியுள்ளனர்." என்று தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து அப்பகுதிகளில் பெரும் அளவிலான சாம்பல்கள் படிந்துள்ளன. சாலை மற்றும் கார்களை குப்பைகள் மூடியுள்ளன.

இந்தோனேசியாவில் கடந்த மாதம் 22ஆம் திகதி நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில் தற்போது எரிமலை வெடிப்பில் 11 பேர் உயிரிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 15,523 பாலஸ்தீனர்களின் பலி

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பாலஸ்தீனர்களின் பலி எண்ணிக்கை 15,523 ஆக உயர்ந்துள்ளதாக ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர் சந்திப்பின்போது அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அஷ்ரப் கூறியதாவது, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பாலஸ்தீனப் பகுதியில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 41,000-ஐ தாண்டியுள்ளது. காயமடைந்த நூற்றுக்கணக்கான மக்கள் மிகக் குறைந்த மருத்துவ வசதிகளுடன் தரையில் சிகிச்சை பெற்று வருவதாக அல்-கித்ரா தெரிவித்தார்.

கடந்த அக்.7ஆம் தேதி இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் தாக்குதல் நடத்தி, சுமார் 240 பேரை பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர்.

இதைத் தொடர்ந்து, காஸா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. காஸா மீது இஸ்ரேல் கடுமையாகத் தாக்குதல் மேற்கொண்டு வந்த நிலையில், ஹமாஸிடம் உள்ள பிணைக் கைதிகளையும் இஸ்ரேலிடம் உள்ள பாலஸ்தீன கைதிகளையும் விடுவிக்க வசதியாக, ஒரு வார காலம் தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

# ஜோ பைடன் அமெரிக்காவின் ஜனநாயகத்தை அழிக்கிறார்!

## டொனால்ட் டிரம்ப் குற்றச்சாட்டு!



அதிபர் ஜோ பைடன் அமெரிக்காவின் ஜனநாயகத்தை அழித்து வருவதாக முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் சனிக்கிழமை குற்றஞ்சாட்டினார்.

அயோவா மாகாணத்தின் ஸீடர் ரேபிட்ஸில் நடைபெற்ற குடியரசுக் கட்சி பொதுக்கூட்டத்தில் டொனால்ட் டிரம்ப் பேசுகையில், 'தன்னுடைய அரசியல் எதிரிகளுக்கு எதிராக அரசை ஆயுதமாக அதிபர் பைடன் பயன்படுத்தி வருகிறார். பைடனும் அவரது கூட்டாளிகளும் ஜனநாயகத்துக்கு துணை நிற்பது போல் தோற்றமளிக்கின்றனர். ஆனால், பைடன் அமெரிக்க ஜனநாயகத்தின் பாதுகாவலர் அல்லர். ஜனநாயகத்தை அவர் அழித்து வருகிறார்.

போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக சீனாவின் குற்றவியல் நீதித் துறை அமைப்பு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. சீன அதிபர் ஷி ஜின்பிங், வடகொரிய அதிபர் கிம் ஜோங்-உன் ஆகியோருடன் நட்புறவைக் கடைப்பிடித்தற்காக பலமுறை விமர்சனத்துக்கு உள்ளானேன். அணு ஆயுதங்களை வைத்துள்ள இத்தகைய நாடுகளுடன் நல்ல நட்புறவைக் கொண்டிருப்பது நல்லது.

2020, அதிபர் தேர்தலில் முறைகேடு நடந்தது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. இது தொடர்பான வழக்குகளை நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்தன. 2024 தேர்தலின்போது ஜனநாயக கட்சியினர் முறைகேட்டில் ஈடுபட வாய்ப்புள்ள டெட்ராய்ட், அட்லாண்டா நகரங்களுக்கு குடியரசுக் கட்சியினர் சென்று வாக்குகளைப் பாதுகாக்க வேண்டும்' என்றார்.

# வடக்கு ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்



வடபுல ஏற்றமதியாளர்களினை ஒன்றிணைத்து வடக்கு ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் (Chamber of Northern Exporters) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கியின் துறைசார் நிபுணர்களின் வழிகாட்டுதலுடன், ஹட்டன் நஷனல் வங்கியின் வடபிராந்திய தலைமைக் காரியாலயத்தில் கடந்த 30ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நிகழ்வில், வங்கியின் தலைமையகத்திலிருந்து வருகை தந்த சிறிய நடுத்தர உற்பத்தியாளர் மற்றும் நுண்பாக நிதிக்கான பிரதிப் பொது முகாமையாளர் திரு ரஜீவ் திசாநாயக்க, சிறிய நடுத்தர உடற்பத்தியளர் மற்றும் கூடடாண்மைக்கான தலைமையாளர் திரு என். கேதீஸ்வரன், வட மாகாண ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உதவிப் பணிப்பாளர் திரு கனோஜன், யாழ் பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் பிரிவுத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவேஷன் ,வடமாகாண தொழிற்துறைத் திணைக்கள தொழிற்துறை மேம்பாட்டு உத்தியோகத்தர் திரு ராகவன் மற்றும், வடமாகாண ஏற்றுமதியாளர்களுடன், வங்கியின் பிராந்திய அலுவலகர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கையின் இன்றைய நலிவுற்ற பொருளாதார சூழலில் ஏற்றுமதி என்பது இந்நாட்டு பொருளாதார ஸ்திரதன்மையினை மேம்படுத்துவதற்கும், புதிய வேலைவாய்பபுக்களினை உருவாக்குவதற்கும் மற்றும் முதலீடுகளினை உள்ளீர்ப்பதற்குமாக ஒரு நம்பிக்கை மிகுந்த பாதையாக காணப்படுகின்றது.

பொதுவாக ஏற்றுமதி கூட்டமைப்பு என்பது ஏற்றுமதி நிறுவனங்கள் அல்லது தனிநபர்களின் ஒரு இணைப்பாகும்.

இது சந்தை தகவல்களைப் பகிர்வது, பொருட்கள், சேவைகளுக்கான கொள்வனவாளர்களுடன் சிறந்த விதிமுறைகளுக்கான பேச்சுவார்த்தைகளினை நடத்துவது, வெளிநாட்டு சந்தையில் தங்கள் தயாரிப்புகள் அல்லது சேவைகளை மேம்படுத்துவதற்கான கூட்டுச் சந்தை முயற்சிகளினை மேற்க்கொள்ளல் போன்ற ஏற்றுமதியின் பல்வேறு அம்சங்களில் ஒத்துழைக்கவும், வளங்களைத் திரட்டவும் கூட்டாக பணியாற்றவும் ஒன்றிணைவு உருவாக்கப்படுகிறது.

பரஸ்பர நன்மைகளுக்காக ஒவ்வொரு உறுப்பினரின் பலத்தினையும் பயன்படுத்துவதையும் இக் கூட்டாண்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக, ஏற்றுமதிக் கூட்டாண்மை தனிப்பட்ட நிறுவனங்களுக்கு அவற்றின் பலங்களை இணைப்பதன் மூலமும், செலவுகளை மேம்படுத்துவதன் மூலமும், சந்தை ஆராய்ச்சியை விரிவுபடுத்துவதன் மூலமும், அபாயங்களைக் குறைப்பதன் மூலமும், இறுதியில்சர்வதேச வர்த்தகத்தில் வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையை ஊக்குவிப்பதன் மூலமும் அதிகாரம் அளிக்கிறது

இலங்கையின் வடக்கு மாகாணம் கடந்த கால போரியல் சூழலில் பாதிக்கப்பட்டிருந்தமையால், நாட்டின் ஏற்றுமதித் துறைக்கு அதன் பங்களிப்பு கணிசமான அளவாகவே காணப்பட்டது.

எவ்வாறெனினும், தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வடபுலம் சார்பாக பெரும்பாலும் விவசாய விளை பொருட்களுக்களும், குறிப்பாக வெப்பமண்டல காய்கறிகள், பழங்கள் மற்றும் கடல் உணவுசார் உடற்பத்தி பொருட்களே அதிகமாக இருந்து வந்துள்ளது.

எனினும் இன்று பல புதிய ஏற்றுமதிக்கான துறைகள் வடக்கே உருவாக்கப்பட்டு வரப்படுகின்றது, இக் கூட்டமைப்பின் தேவை இன்று வடக்கே தேவையானதும் அவசியமானதுமாக நோக்கப்படுகின்றது.

எனவே, புதிதாக உருவாக்கப்படும் வடக்கு ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பு (Chamber of Northern Exporters), நீண்ட கால பயணத்தின் தொடக்கமாக இருக்கும்.

பிராந்தியத்தின் இத்தகைய முக்கியமான முன்முயற்சியை எளிதாக்குவதில் உடீே சிறப்புரிமையும் பெருமையும் கொள்கிறது.

கூட்டமைப்பின் மற்றொரு நன்மை தேசிய ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பிலிருந்தும் நன்மைகளை அதிகரிப்பதாகும். தேசிய ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பு என்பது ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பாகும், இது தேசிய அளவில் உள்ளூர் ஏற்றுமதியாளர்களின் நலன்களை ஒருங்கிணைத்தல், ஆதரித்தல் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இப்புதிய முயற்சியில் உருவான இக் கூட்டமைப்பு நாளைய வடபுல ஏற்றுமதிவளச்சியின் ஒரு பலமிக்க படிக்கல்லாக அமையும் என்பதே உண்மை என வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

## காரைதீவில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்க கலாச்சார நிகழ்வு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

இனங்களுக்கிடையிலான நல்லுறவை கட்டியெழுப்பும் வகையில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்க கலாச்சார நிகழ்வொன்று அண்மையில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் யெகராஜன் தலைமையில் காரைதீவு. இராம கிருஷ்ணன் பெண்கள் பாடசாலையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் காரை தீவு பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர்கள், சிறுவர் மகளிர் நன்நடத்தை பிரிவு உத்தியோகத்தர்கள், காரைதீவு,மாளிகைக்காடு மற்றும் மாவடிப்பள்ளி பிரதேச மாணவர்களும் கலந்து கொண்டனர். அதிதிகளினால் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டன.




## பிலிப்பைன்ஸ் நாட்டில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்




பிலிப்பைன்ஸ் நாட்டில் 7.5 ரிக்டரில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. மிண்டானாவ் பகுதிக்கு அருகில் சனிக்கிழமை அன்று இலங்கை நேரப்படி இரவு 8:07 மணி அளவில் இந்த நிலநடுக்கம் பதிவானது.

இதன்காரணமாக பிலிப்பைன்ஸ்மற்றும்தென்மேற்கு ஜப்பான் கடற்கரை பகுதியை சுனாமி தாக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் சுனாமி அபாயம் தற்போது கடந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கடல் கொந்தளிப்புடன் சில இடங்களில் காணப்பட்டதாக தகவல். சுமார் 63 கிலோ மீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவானது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலநடுக்கம் மற்றும் எரிமலை வெடிப்பு சம்பவங்கள் அவ்வப்போது பதிவாகிறது. இந்த நிலநடுக்கம் சுமார் 4 நிமிடங்களுக்கு மேல் உணரப்பட்டதாகவும், சக்தி வாய்ந்தது எனவும் அந்நாட்டு மக்கள் தெரிவித்துள்ளனர். நிலநடுக்கத்தை தொடர்ந்து மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி, மேடான பகுதிகளுக்கு சென்றதாகவும், பாதிப்பு மற்றும் உயிரிழப்பு குறித்த விவரங்கள் தெரியவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளன.





## டெங்கு ஒழிப்பு பிரிவினர் விலகல்



யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து டெங்கு ஒழிப்பு கடமைகளில் இருந்து டெங்கு தடுப்பு உதவியாளர்கள் விலகியுள்ளனர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் டெங்கு தடுப்பு உதவியாளர்களால் கையளிக்கப்பட்டது.

நிரந்தர நியமனம் மற்றும் நிலுவை கொடுப்பனவு வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் சிக்கல்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென கோரி அவர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சிக்கல்களுக்கு தீர்வு வழங்குமாறு கோரி கடந்த 1 ஆம் திகதி முதல் நடைபெறும் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் எதிர்வரும் 8ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தற்போதைய காலப்பகுதியில் டெங்கு தொற்று எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (O1)

## யாழ் பல்கலையில் நடை பவனி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகளை நிறைவு செய்வதனை முன்னிட்டு அதன் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் ஒரு நிகழ்வாக சுகநல மேம்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான நடை பவனி நேற்று 3 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இணைந்த சுகநல விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன், விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி சி. சபாஆனந்த் மற்றும் விரிவுரையாளர்கள் கூட்டாகக் கொடியசைத்து ஆரம்பித்து வைத்த இந்த நடை பவனி பிறவுண் வீதி, இராமநாதன் வீதி, கே.கே.எஸ் வீதி, வைத்தியசாலை வீதி, பலாலி வீதி ஊடாகச் சென்று பல்கலைக்கழகத்தின் பிரதான வளாக முன்றலை அடைந்தது. அங்கிருந்து நகர்ந்த நடை பவனி பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில் விளையாட்டு விஞ்ஞான அலகின் பழைய மாணவர்கள், விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (O1)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.12.2023இல் வெளியிடப்பெற்றது.